## கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 11995/அ1/2018 நாள் 09.09.2021

*******

பொருள் : பள்ளிக் கல்வித் துறை – பொதுப் பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு. எம். அய்யம் பெருமாள் பிள்ளை என்பவரின் வாரிசுதாரர் திரு. அ. ராஜன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு

பார்வை :
1. நாகர்கோவில், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க. எண். 4146/அ1/2016 நாள் 22.07.2016
2. அரசாணை (நிலை) எண். 48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 26.02.2021
3. சென்னை - 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண். 21925/ஜே/இ4/2021 நாள் 09.04.2021
4. நாகர்கோவில், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க. எண். 4718/அ1/2018 நாள் 31.10.2018

*******

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கல்வி மாவட்டம், இரவிபுதூர், அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆவண எழுத்தராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 08.02.2009 அன்று காலமான திரு. எம். அய்யம் பெருமாள் பிள்ளை என்பவரின் வாரிசுதாரர் திரு. அ. ராஜன் என்பவருக்கு பார்வை 1ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிமாக நியமனம் செய்யப்பட்டு, 26.07.2016 முற்பகல் முதல் இராமபுரம், அரசு உயர்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 2ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல், கீழ்காணுமாறு தெரிவக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித் தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கிழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய

Scanned by CamScanner

செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித் தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில், பார்வை 2ல் காணும் அரசாணையின்படியும், பார்வை 4ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு. அ. ராஜன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 26.07.2016 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி, திரு. அ. ராஜன் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவகாலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள்/பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

13/9/21

முதன்மைக் கல்வி அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்

13/9/21

பெறுநர்

சார்ந்த பணியாளர் (உரிய வழியாக).

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   நாகர்கோவில்.
2. தலைமையாசிரியர்,
   அரசு உயர்நிலைப் பள்ளி,
   இராமபுரம்.

Scanned by CamScanner